மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை 01.10.2024 கதிர் 374

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



# அரசமைப்பின் மூலமாகவே இன நெருக்கடிக்குத் தீர்வு

## சர்வஜன வாக்கெடுப்புக்கும் விடப்படும் என்கிறார் அமைச்சரவையின் பேச்சாளர் விஜித ஹேரத்



"நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலின் மூலமாக புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பமாகும்" என்று தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத்,"புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டதும் அது, சர்வஜன வாக்கெடுப்புக்காக மக்கள் முன் சமர்ப்பிக்கப்படும்" என்றும் குறிப்பிட்டார்.

"சமீபத்தில் இடம்பெற்றது ஜனாதிபதி தேர்தல். ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்" என்று தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத், 'புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்காக நாடாளுமன்ற தேர்தலிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது" என்றும் இனப் பிரச்சினைக்கு தீர்வை பொறுத்தவரை புதிய அரசமைப்பை உருவாக்கி மக்களின் முன்னால் சர்வஜன வாக்கெடுப்பிற்காக சமர்ப்பிப்போம்" என்றும் தெரிவித்தார்.

'எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்விடயத்தை தெளிவாக தெரிவித்துள்ளோம்" என்று– அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை

### மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்து சட்ட நவடிக்கை ஆரம்பித்தது அரசாங்கம்



முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிற்கு தற்போது விடுபாட்டுரிமை இல்லை என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அத்துடன், சிங்கப்பூரில் அடைக்கலம் புகுந்துள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை நாடடிற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுககப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 6



## ஜனாதிபதியை சந்தித்த அமெரிக்கத் தூதுவர்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் அமெரிக்க தூதுவர் ஜூலி ஜே சங்கிற்கும் இடையிலான சந்திப்பு இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. 6

## முன்னாள் அமைச்சர்கள், எம்.பி.க்களின் இராஜதந்திரக் கடவுச் சீட்டுக்கள் ரத்து

அனைத்து முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் (னுடிடழஅயவஉை‛யளளிழசவ) நாடாளுமன்றத்தை கலைத்தவுடன் இரத்து செய்யப்படும் என நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி குஷானி ரோஹணதீர குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடம் அறிவித்துள்ளார். குறித்த கடவுச்சீட்டுக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதை அனைத்து அமைச்சர்களுக்கும் தனிப்பட்ட ரீதியிலும் அறிவிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தில் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் தலைமைப் பணியாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன தெரிவித்தார். அதன்படி, அரசியலமைப்பின் நிர்ணய சபை உறுப்பினர்களான, சபாநாயகர், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் அமைச்சர்கள் தவிர நாடாளுமன்றத்தின் ஏனைய 219 பேர் மற்றும் அவர்களுக்கு நெருங்கிய உறவினர்களின் குறித்த இராஜதந்திர கடவுச் சீட்டுக்கள் இரத்து செய்யப்படும்.

சாதாரண முறைப்படி அமைச்சர்களுக்கு, இராஜாங்க அமைச்சர்களுக்கு அவர்களின் மனைவிமாருக்கு மற்றும் 18 வயதுக்கு குறைந்த அவர்களின் பிள்ளைகளுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு சிறப்புரிமைகள் கிடைக்கப்படுகின்றன.

## அநுர – சிறிதரன் சந்தித்துப் பேச்சு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஶ்ரீதரன் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார். 6

## புலமைப் பரிசில் வினாத்தாள் திருத்தும் பணி ஒத்திவைப்பு

### ஜனாதிபதி அநுர உத்தரவு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வினாத்தாள் பிரச்சினை தொடர்பில் 6

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்







சிறுவர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஜஓஎம் அலுவலகத்திற்கு முன்பாக இன்று காலை போராட்டம் நடைபெற்றது.

இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டமை தொடர்பாக நீதி கோரி கோஷங்களை எழுப்பினர்.

# எனது வாகனங்களையும் அரசாங்கம் மீளப் பெற்றால் பஸ்ஸில் செல்வேன்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவிப்பு

எனக்கு வழங்கப்பட்ட வாகனங்களை அரசாங்கம் மீளப் பெற்றால் பேஷரூந்தில் பயணிப்பதற்கு எனக்கு வெட்கம் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கள் தெரிவித்துள்ளார்.

“அரசாங்கத்தினால் எனக்கு வழங்கப்பட்ட வாகனங்களை மீளப் பெற்றால் பேஷரூந்தில் பயணம் செய்வதற்கு எனக்கு வெட்கம் எதுவும் இல்லை. நான் யாரையும் சார்ந்தும் இருக்கவில்லை” என்றும் சந்திரிக்கா தெரிவித்தார்.

“நான் வேறு நபர்களுக்கு வழங்கியோ அல்லது யாரிடம் இருந்தும் பெற்றுக் கொண்டதோ இல்லை” என்று குறிப்பிட்ட அவர், “ஜனாதிபதிப் பதவியில் இருந்து வெளியேறிய போது எனது வங்கி கணக்கில் பணம் எதுவும் இல்லை” என்றும் தெரிவித்தார்.

“மகிந்த ராஜபக்ஷவின் 9 வருட கால ஆட்சியில் எனக்கான ஓய்வுநிலை பணமோ, சலுகைகளோ எதுவும் கிடைக்கவில்லை. எனது பணி யாளர்களின் சம்பளம், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை நானே செலுத்தினேன்” என்றும் சந்திரிகா குறிப்பிட்டார்.

“அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீடு. மற்றும் நான்கு வாகனங்களை தற்போது வரை பயன்படுத்தி வருகின்றேன்” என்று குறிப்பிட்ட சந்திரிகா குமாரதுங்க, “பயணம் செய்யும் போது ஒரு ஜீப், ஒரு கார் பாதுகாப்புக்காக இரண்டு வாகனங்களை பயன்படுத்தி வருகின்றேன்” என்றும் தெரிவித்தார்.

# ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே? மட்டக்களப்பிலும் இன்று போராட்டம்



சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற நிலையில் சிறுவர்கள் பங்குகொண்ட கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் சிறுவர் தினத்தினை முன்னிட்டு இறுதி யுத்ததின்போது ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுக்கான நீதி கோரி இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு இறப்பு சான்றிதழ்தான் பதில் என்றால் கொலைசெய்தவன் யார்?, பிள்ளைகளை தினம் தேடிக்கொண்டே இறந்துகொண்டு இருக்கின்றோம், கையளிக்கப்பட்ட சகோதரங்கள் எங்கே? என்கின்ற வாசகங்கள் அடங்கிய பதகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பை முன்னெடுத்தனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# திருமலையில் 42 ஏக்கர் காணி தொடர்ந்து ஆக்கிரமிப்புக்குள்

## குடியிருப்பளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்று முறைப்பாடு

(ஹஸ்பர் ஏ.எச்).

திருகோணமலை பட்டணமும் சூழலும்பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வெல்வேரி கிராமத்தினை சேர்ந்த பொதுமக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வசித்துவந்த 31 குடும்பத்தினர்களது 42 ஏக்கர் குடியிருப்புக் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் அந்த காணிகளில் 35 ஏக்கர் காணிப் பகுதியானது பெரும்பான்மையினத்தினை சேர்ந்த தனி நபர் ஒருவருக்கு அரசினால் குத்தகை அடிப்படையில்வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டது தொடர்பாக முறையிடுவதற்காக வருகை தந்திருந்தனர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக குறித்த கிராமத்தவர்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையில் அவர்கள் மீளக் குடியேற முட்பட்டபோது அவர்களது காணிப்பகுதிகளை அரசானது கையகப்படுத்தியதோடு யுத்தம் முடினந்து பல வருடங்கள் ஆகிய நிலையில் குறித்த காணிகளில் இற்றை வரை மீளக்குடியேற முடியாதிருப்பதன் காரணமாக அது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடுவதற்கு வந்திருந்தனர்.

1983ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது தாம் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்ததன் பின்னர் 90களிலும் இடம்பெயரநேரிட்டதாகவும் அதன் பின்னராக அவர்களது வீடுகள் இருந்த பகுதிகளில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்ததால் அப்போது மீளவும் குடியேற முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர்.

அதன் பின்னராக வனஜீவராசிகள் திணைக்களம் குறித்த பகுதியில் எல்லையிட்டதன் பின்னராக தற்போது அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்ததுடன் அவ்வாறு எல்லையிடப்பட்ட பகுதிகள் அரச இயந்திரங்கள் மூலமாக பெரும்பான்மையினத்தினை சேர்ந்த தனிநபர் ஒருவருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்க்கடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் அது தொடர்பில் பலதரப்பட்ட மட்டங்களில் முறையிடப்பட்டிந்த போதிலும் தகுந்த பதில் கிடைக்கப்பெறாத நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட வருகை தந்திருப்பதாகவும் இதன் போது அவர்கள் குறிப்பிட்டனர்.






# தனியார் பஸ் கட்டணத்தை 4 வீதம் குறைக்க இணக்கம்

## குறைந்த கட்டணம் 25 ரூபாவாக இருக்கும்

எரிபொருள் விலையை குறைத்ததால் பேருந்து கட்டணத்தை 4 வீதத்தால் குறைப்பதற்கு தமது சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, குறைந்தபட்ச பேருந்து கட்டணத்தை 25 ரூபாவாக குறைக்க முடியும் என சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மாதாந்த விலை சூத்திரத்தின் பிரகாரம், நேற்று நள்ளிரவு முதல்அமுலுக்கு வரும்வகையில்எரிபொருள் விலைகள் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

இதன்படி, ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 21 ரூபாவினால் குறைந்துள்ளதுடன், அதன் புதிய விலை 311 ரூபாவாகும்.

95 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும்

லங்கா ஒயிட் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 24 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 283 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 33 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 319 ரூபாவாகும்.




# ஸ்ரீலங்கன் முகாமைத்துவத்தை மாற்றியமைக்க நடவடிக்கை

## முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

ஸ்ரீலங்கன் விமான சேவையின் பங்குகளின் 51 சதவீதத்தை விற்பனை செய்ய கடந்த அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தை நிறுத்துவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் முதலாவது அமைச்சரவை கூட்டத்தின் போதே, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றது.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் பங்குகளை விற்பனை செய்ய அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு பிரிவு நடவடிக்கை எடுத்திருந்தது. இதற்கமைய, தனியார் முதலீட்டாளர்களை இணைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதனைக் கைவிட்டு ஸ்ரீலங்கன் விமான சேவையின் முகாமைத்துவத்தை செயற்திறன் மிக்கதாக மாற்றுவது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தினால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லிட்ரோவுக்கு புதிய தலைவர் நியமனம்

லிட்ரோ கேஸ் நிறுவனம் மற்றும் லிட்ரோ கேஸ் டெர்மினல் லங்கா நிறுவனத்தின் தலைவராக சன்ன குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக இருந்த முதித பீரிஸ் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பதவி விலகியமையும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை அநுரா அரசாங்கம் ஏற்படுத்துமா?

**எஸ்.கிருஷ்ணகுமார்**



ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிவடைந்த நிலையில், அதிரடியான அரசியல் நகர்வுகளை கடந்த ஒரு வாரத்தில் காணக் கூடியதாக இருந்தது. ஜனாதிபதி பதவியேற்பு, புதிய பிரதமர், மூன்று உறுப்பினர் அமைச்சரவைநியமனம்என்பவற்றைத்தொடர்ந்து நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டுவிட்டது. குறுகிய காலத்துக்குள் அடுத்த பொதுத் தேர்தலை நாடு சந்திக்கப்போகின்றது. அரசியல் கட்சிகள் அனைத்துமே பொதுத் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதில் தமது கவனத்தைக் குவித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரையில் அதன் முடிவு ஓரளவுக்கு ஊகிக்கப்பட்டதுதான். அதேவேளையில், பல்வேறு கருத்துக் கணிப்புக்களும்தேசியமக்கள்சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றும் என்பதை உறுதிப்படுத்தியிருந்தன. அதேவேளையில், எந்தவொரு வேட்பாளரும் 50 வீததத்தைப் பெறமுடியாத நிலையில், இரண்டாவது தெரிவு கணிப்பிட வேண்டிய நிலை வரலாம் என்பதும் எதிர்வு கூறப்பட்டிருந்தது. அவ்வாறே நடைபெற்றும் உள்ளது.

அநுரகுமார திசநாயக்கவின் வெற்றிக்கான அடிக்கல் இரண்டு வருடங்களுக்கு முன்னரே நாட்டப்பட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். 2022 இல் இலங்கையில் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சி நாட்டில் ஒரு முறைமை மாற்றத்தை- அதாவது சிஸ்ரம் சேஞ்சை எதிர்பார்த்ததாகவே இருந்தது. ஆனால், ஆளும் தலைவர்கள் மாறினார்களே தவிர, பழைய நிலைமைதான் தொடர்ந்து. அதாவது, கோட்டாபய போக ரணில் அதிகாரத்துக்கு வந்தார். ரணிலின் தலைமை பொருளாதார குற்றங்களைச் செய்வார்கள் என நீதிமன்றத்தினாலேயே அடையாளம் காணப்பட்ட ராஜபக்ஷக்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பதிலாக அவர்களைப் பாதுகாத்தது.

நெருக்கடியிலிருந்து நாட்டைப் பாதுகாத்தவர் என்று ரணில் தரப்பினர் அவரை முன்னிலைப்படுத்திய போதிலும், மக்கள் ரணிலைத் தோற்கடித்துள்ளார்கள். அதற்கு பிரதான காரணங்களில்ஒன்று ராஜபக்ஷக்களை அவர் பாதுகாத்ததுதான். நாடாளுமன்றத்தில் ரணிலுக்குப் பெரும்பான்மை இருக்கவில்லை. ராஜபக்ஷக்களுக்குஆதரவானநாடாளுமன்றத்தை நம்பித்தான் அவர் ஆட்சியைக் கொண்டு நடத்த வேண்டியவராக இருந்தார்.

“கோட்டா கோ கம” என்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவதை மட்டும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்தது அரசியல் முறைமையில் ஒரு முழுமையான மாற்றத்தைத்தான். அரசியல் தலைமை மாற்றத்தை மட்டுமல்ல. ரணில் அதனைச் செய்யவில்லை. படை பலத்தைப் பயன்படுத்தி போராட் டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். மறுபுறம் ராஜபக்ஷக்களைப் பாதுகாத்தார் அவரது தோல்விக்கு அவைதான் காரணமாகியது. சஜித் பிரேமதாசவும் ஏதோ ஒரு வகையில் பாரம்பரிய அரசியல் கட்சிகளின் தொடர்ச்சியாகவே உள்ளார். அவர் அதிகாரத்துக்கு வந்தாலும், ஏதோ ஒருவகையில் பழைய நிலைமைகள்தான் தொடரும், சில விடயங்களில் அவர் கடுமையாக நடந்துகொள்ள முடியாதவராக இருக்கும் என்று தான் மக்கள் பார்த்தார்கள். அவர் அமைத்த அரசியல் கூட்டணிகளும் அதற்குக் காரணம்.

“முறைமை மாற்றம்” ஒன்றை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், பாரம்பரிய கட்சிகளை நிராகரித்துவிட்டு புதிய தலைமை ஒன்றை தோற்றுவிக்க வேண்டும்என்று சிங்கள மக்களின் சிந்தனையாக இருந்தது. அதன் விளைவுதான் அநுரகுமாரவின் வெற்றி! மற்றையவர்களின் படுதோல்வி!!

ஆக, அநுரகுமாரவிடம் மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாகவே இருக்கின்றது. குறிப்பாக, ஊழல் பேர் வழிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதற்கான ஒரு திட்டத்துடன்தான் அநுரவின் அரசாங்கம் செயற் படுவதாகவும் தெரிகின்றது. இந்த விடயத்தில் அதிரடியான சில செயற்பாடுகளை அடுத்துவரும் வாரங்களில் எதிர்பார்க்கலாம். மறுபுறத்தில் ஊழல் மோசடிப் பேர்வழிகள், அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்கள் பலர்பெரும் அச்சத்துடன் இருக்கின்றார்கள்.

முக்கியமான சிலர் தேர்தலுக்கு முன்னரே விமானம் ஏறிவிட்டார்கள். வேறு சிலர் தேர்தல் முடிந்து முடிவுகள் வெளிவருவதற்கு முன்னர் தப்பிச்சென்றுவிட்டார்கள். அநுர ஜனாதிபதியாக அதிகாரத்தை கைகளில்எடுத்த பின்னர்வெளிநாடு செல்ல முயன்ற சிலர்தடுத்துநிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 30 நபர்களுடைய பட்டியல் ஒன்று கட்டுநாயக்க மற்றும் பலாலி விமான நிலையங்களுக்குக்கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இது உறுதிப்படுத்தப்பட்ட செய்தியல்ல.

பெயர்ப் பட்டியல் கொடுக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவல் தவறானதாக இருந்தாலும், தமது பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தில் வெளிநாடு செல்ல விரும்பிய பலர் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

கடந்த காலங்களில் அதிகாரத்தை துஷ்பிரயோகம்செய்துஊழல்களில்ஈடுபட்டவர்கள் எந்தளவுக்கு அச்சமடைந் திருக்கின்றார்கள் என்பதற்கு, காலி முகத்திடல், சுதந்திர சதுக்கம் உட்பட பல பகுதிகளிலும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டுள்ள சொகுசு வாகனங்கள் சாட்சியாகவுள்ளது. சுமார் 3 கோடி முதல் 5 கோடி வரையில் பெறுமதியான 500 க்கும் அதிகமான சொகுசுவாகனங்கள் இவ்வாறு கொண்டுவந்து நிறுத்தப்பட்டுள்ளன. முன்னைய ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள், மற்றும் அதிகாரிகளால் அந்த வாகனங்கள்பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் எரிபொருள் என்பவற்றுக்காக மாதாந்தம் மூன்றரை இலட்சம் ஷரூபா வரையில் செலவிடப்பட்டிருக்கின்றது என்பது மற்றொரு அதிர்ச்சியான தகவல்.

மக்களின்வரிப்பணத்தில்சொகுசுவாழ்க்கையை அதிகாரத்தில் இருந்த ஒரு தரப்பினர் நடத்திவந்திருக்கின்றார்கள் என்பதைத்தான் இந்த வாகனங்கள் பறைசாற்றி நிற்கின்றன. வழமையாக ஆட்சிகள்மாறினாலும் முன்னைய அமைச்சர்கள், அதிகாரிகள் வாகனங்களை ஒப்படைப்பதில்லை. அல்லது பல மாதங்களின் பின்னர் தான் அவற்றை ஒப்படைப்பார்கள். ஆனால், அநுர பதவிப் பிரமாணம் செய்த உடனடியாகவே இந்த வாகனங்கள் கொண்டுவரப்பட்டு கைவிடப்பட்டிருப்பது அவர்களுடைய அச்சத்தைக் காட்டுகின்றது.

நான்கு விடயங்களை அநுர அரசு கைகளில் எடுக்கும் என்று எதிர்பார்க்கலாம். முதலாது, ஊழல்-மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்களின் கோவைகள் அவர்களிடம் உள்ளது. அத்துடன், வீண் விரயங்களைக் கட்டுப்படுத்த அவர்கள் முனைகிறார்கள். இரண்டாவது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல். மூன்றாவது கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகள். நான்காவது மத்திய வங்கி பிணைமுறி விற்பனை மோசடி. இவை அனைத்துக்கும் தேவையான கோவைகள் அநுர தரப்பினரிடம் இருப்பதாகவே தெரிவிக்கப்படுகின்றது. இவை குறித்து நீதிமன்றத்தின் மூலமாகவே விசாரணைகளை முன்னெடுப்பதுதான் அவர்களுடைய திட்டம் என்று தெரிகின்றது.

பொதுத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வது என்பதுதான் தேசிய மக்கள் சக்தியின் அடுத்த இலக்கு. ரணில் அரசு எதனைச் செய்வதற்கு அஞ்சியதோ அதனைச் செய்வதன் மூலமாக தமது செல்வாக்கை இன்னும்பலப்படுத்துவது அவர்களது உபாயமாக இருக்கலாம். அவற்றை முன்னெடுப்பதன் மூலமாகவே எதிரணியினரை மீண்டும் எழ முடியாத நிலையை ஏற்படுத்தலாம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். பொதுத் தேர்தலுக்கு முன்னதாக பல அதிரடிகளை எதிர்பார்க்கலாம் என்கிறார்கள்.

வாகனக்கண்காட்சி, முன்னாள்ஜனாதிபதிகள், எம்.பி.க்களுக்கான தேவையற்ற கொடுப்பனவுகள், அநாவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றைக் குறைப்பதன் மூலம், எந்தளவுக்கு மக்களின் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது என்பது அம்பலமாக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் இவற்றின் பின்னணியில் இருந்தவர்கள் அச்சத்துடன் காணப்படுகின்றார்கள்.

அவர்கள்மீது உளவியல் ரீதியாக போர் ஒன்றை அரசாங்கம்தொடுத்துள்ளது. அதேவேளையில், மக்கள் மத்தியில் அவர்களை அம்பலப்பத்தி வருகின்றது. பொதுத் தேர்தலில் இது நிச்சயமாக பிரதிபலிக்கும்!

# லெபனானில் தரைவழி தாக்குதலை தொடங்கியது இஸ்ரேல் ராணுவம்

## உச்ச நிலையில் போர்ப் பதற்றம்

‘லெபனான் மீதான தாக்குதலை நிறுத்தவும் மத்திய கிழக்கில் பதற்றத்தை தவிர்க்கவும்..’ என்று ஐ.நா. தொடங்கி சர்வதேச அமைப்புகளும், உலக நாடுகளும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் கூட நேற்று திங்கள்கிழமை இரவு லெபனான் மீது இஸ்ரேல் தரைவழித்தாக்குதலைத்தொடங்கிவிட்டது. லெபனானின் சில குறிப்பிட்டப் பகுதிகளைக் குறிவைத்து தரைவழித் தாக்குதலைத் தொடங்கிவிட்டதை இஸ்ரேல் ராணுவம் உறுதியும் செய்துள்ளது.




இது தொடர்பாக இஸ்ரேல் ராணுவம் தனது அதிகாரபூர்வ எக்ஸ் பக்கத்தில் நீண்ட விளக்கம்



ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், “இஸ்ரேல் அரசியல் குழுவின் முடிவுக்கு இணங்க, தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா பயங்கரவாத இலக்குகள் குறித்த உளவுத்துறை அளித்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் துல்லியமான இலக்குகளைக் குறிவைத்து, வரையறுக்கப்பட்ட பகுதியில், தரைவழித் தாக்குதல்களை இஸ்ரேல் ராணுவம் தொடங்கியுள்ளது.

இந்த இலக்குகள் இஸ்ரேலின் எல்லைக்கு அருகில் உள்ள கிராமங்களில் அமைந்துள்ளன. இவை வடக்கு இஸ்ரேலில் உள்ள இஸ்ரேலிய மக்களுக்கு நீண்டகால அச்சுறுத்தலாக உள்ளன.



இந்தத் தரைவழித் தாக்குதலில் அண்மையில் ராணுவப் பயிற்சி அளித்து தயார்படுத்தப்பட்ட வீரர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேலிய விமானப்படை மற்றும் பீரங்கிக் படைகள் களத்தில் ராணுவ வீரர்களுக்கு பக்கபலமாக இருக்கும்.

லெபனான் மீதான இந்தத் தரைவழித் தாக்குதல் இஸ்ரேலின் அங்கீகரிக்கப்பட்டு அரசியல் அதிகார சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகிறது.

நடவடிக்கை ‘நோர்தன் ஆரோஸ்’ (ழேசவாநசெ யுசசழறள) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ராணுவ நடவடிக்கை சூழலுக்கும், தேவைக்கும் ஏற்ப முன்னெடுத்துச் செல்லப்படும். அதேவேளையில், காசா மற்றும் பிற முனைகளில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதலும் தொடரும்.

போரின் இலக்குகளை அடைய இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது, மேலும் இஸ்ரேல் குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் வடக்கு இஸ்ரேலின் குடிமக்களை அவர்களின் வீடுகளுக்குத் திரும்பச் செய்வதற்கும் தேவையான அனைத்தையும் செய்து வருகிறது.” எனத் தெரிவித்துள்ளது.

1000-ஐ கடந்த உயிரிழப்பு: லெபனான் மீதான இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1000-ஐ கடந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டுமே 95 பேர் கொல்லப்பட்டனர். 170-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.



## அர்ஜுன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மத்தியவங்கி திறைசேரி பிணைமுறி மோசடி தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் இதனை தெரிவித்துள்ளார். மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்ததால் அவருக்கு விடுபாட்டுரிமை காணப்பட்டதால் முன்னர் மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ரணில்விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியில்லை அவருக்கு தற்போது விடுபாட்டுரிமையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய அரசாங்கத்திற்கு ரணில் விக்கிரமசிங்கவை நீதிமன்றத்தின் அழைப்பதற்கான அதிகாரம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ள அமைச்சரவை பேச்சாளர், தற்போது சிங்கப்பூரில் அடைக்கலம் புகுந்துள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாட்டிற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்கவிற்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அமெரிக்க தூதுவர், அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளை தொடர்ந்தும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள், பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை வலுப்படுத்தல், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள துறைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## அநுர

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மக்கள் இறைமையின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்த எஸ். ஸ்ரீதரன் , ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

## புலமைப்பரிசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆர் பாட்டத்தில் ஈடுபட்டுவந்த பெற்றோர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது 5 ஆண்டு புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்தும் பணிகளை இரு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை அறிவுறுத்தினார். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் 3 கேள்விகள் அன்றி 8 கேள்விகள் பரீட்சைக்கு முன்பாகவே வெளியாகி இருந்ததெனவும், அந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துமாறும் பெற்றோர்கள், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.







## பனம் விதைகள் சேகரிப்பு திட்டம் இன்று அறிமுகம்




பூநகரி கைத்தொழில் பேட்டை நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பனம் விதைகள் சேகரிப்பு திட்டத்தின் அறிமுக நிகழ்வு இன்று நடைபெற்றது.

இன்று காலை 10:30 மணி அளவில் பூநகரி மட்டுவில் நாடு, மறவகுறிச்சி பத்தினியார் காட்டு பிள்ளையார் சன சமூக நிலையத்தில் சிறப்பாக இடம் பெற்ற இவ் நிகழ்வில்

பூனகரி பிரதேச சபை சனசமூக நிலைய உத்தியோகத்தர், பூநகரி பிரதேச சபையின் உப அலுவலகத்தின் பொறுப்பு அதிகாரி மற்றும் பூனகரி கைத்தொழில் பேட்டையின் நிறுவுனர்கள் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வை சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தற்போது இலவசமாக கிடைக்கின்ற பனை விதைகளை சேகரித்து அவற்றைமதிப்புகூட்டிஉற்பத்திபொருட்களாக விற்பனை செய்யும் திட்டம் பற்றியும் ,

அவற்றை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றியும் அதிகாரிகளாலும் செயற்பாட்டாளர்களாலும் சிறப்பாக விளங்கப்படுத்தப்பட்டது .

இந்நிகழ்விலே கிராமத்தைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி ஸ்ட்ராட்ஃபோர்ட் கல்லூரியில் இடம்பெற்ற மாபெரும் கண்காட்சி













(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி ஸ்ட்ராட்ஃபோர்ட் இன்டர்நேஷனல் கல்லூரியின் முதலாவது மாபெரும் கண்காட்சி ஒன்று நேற்று திங்கட்கிழமை காலை 9.00 மணியில் இருந்து மாலை 5.00 மணிவரை பாடசாலையில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் ரம்சானி பேகம் தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சியில் அதிதிகளாக ஓய்வு பெற்ற கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலையின் அதிபர் எம் எம் எம் ரோஸ் புகாரி , ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.டி.எம் பைறுஸமான், வை.எம்.எம் ஏ கற்பிட்டி கிளையின் ஆலோசகர் எச்.எம் சுஹைப் , தலைவர் ஏ.எச்.எம்.எம் ஷாபி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பாடசாலை மாணவர்களின் இணை பாடவிதான செயற்பாடுகளின் அங்கமாக உள்ள திறமைகள் மற்றும் புதிய படைப்புகளை வெளிப்படுத்தும் நோக்கோடு தொடர்புபட்ட மேற்படி கண்காட்சி நிகழ்வு, கல்வி மற்றும் கலாச்சார விழுமியங்களை கொண்டதாக அமைந்திருந்தமை விசேட அம்சமாகும்.

மேற்படி நிகழ்வை சிறப்பாக நடாத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் என சகல தரப்பினருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கல்லூரியின் அதிபர் ரம்சானி பேகம் தெரிவித்துள்ளமை யும் குறிப்பிடத்தக்கது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# கண்ணகி இந்துவில் சர்வதேச சிறுவர் தினக்கொண்டாட்டம்!









(வி.ரி.சகா)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை சிறுவர் தினக்கொண்டாட்டமும் பாண்ட் வாத்திய கருவிகள் அன்பளிப்பு நிகழ்வும் அதிபர் சீ.திருக்குமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம் ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் (ராஜன்) தலைமையிலான வீரக்குட்டி குடும்பத்தினர் பாண்ட் வாத்திய கருவிகளை அன்பளிப்பு செய்துள்ளனர்.

முன்னதாக வரலாற்றில் முதல்தடவையாக பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டது.

பிரதம அதிதியாக காரைதீவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆ.சஞ்சீவன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக ஒஸ்கார் அமைப்பின் சார்பாக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் இ.தவராசா ஆசிரியர்களான இ.ரத்னகுமார் கே.லோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

பாடசாலை இணைப்பாளர் திருமதி சோதீஸ்வரி கமலநாதன் ஆசிரிய ஆலோசகர் ரி.சிவநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பாண்ட் வாத்திய கருவிகள் அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது. சிறுவர் தின நிகழ்வுகளும் நடைபெற்றன




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2024 இல் வெளியிடப்பெற்றது.